# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 406/2012 உடன் இணைந்த அசல் வழக்கு எண் 53/2010**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **ஏ. பச்சமுத்து** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **அழகப்பன்** | தொழில் | .. | **லாரி ஓட்டுநர்** |
| வயது | .. | 65 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **தங்காயூர்** | நாள் | .. | 02.01.2023 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ஆம் நாள் திங்கட்கிழமை திரு. பச்சமுத்து த/பெ. அழகப்பன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதிகள் தரப்பு 2 ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 3 ம் நபர் ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 2 ஆம் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து இருக்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது சாட்சியாக பச்சமுத்து என்று கையொப்பம் செய்துள்ளது நான்தான். அந்த கையெழுத்து மட்டும் **வா.சா.ஆ.**5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /ஏ. பச்சமுத்து

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.